# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 154 இன் கீழ்)

(Under Section 173 BNSS)

(BNSS பிரிவு 173 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129360

1. District : திருச்சி
மாவட்டம்

PS : கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு, திருச்சி
காவல்நிலையம்

Year : 2024
ஆண்டு

FIR No. : 14
மு.த.அ. எண்

Date : 26/10/24
நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7, 7(A)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 25.10.24
Date to நாள் வரை : 13.00 hrs

Time Period : நேர அளவு
Time from நேரம் முதல் : 25.10.24
Time to நேரம் வரை : 17.30 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.10.24
Time நேரம் : 12.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் மாவட்ட அலுவலர் அலுவலகம் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, திருச்சி. சுமார் 3 km உள்ளது

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் வை. வனிதா

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் வைரவேல்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 6/6/86

(d) Nationality : நாட்டினம் இந்தியன்

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் —

Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : தொழில் [illegible] தீயணைப்பு ஓட்டுநர்

(g) Address : முகவரி [illegible]

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. R. ஜெகதீஷ், வயது 47/24, S/o இராமலிங்கம், மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, திருச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதம் இல்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

26/10/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

26/10/24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 26/10/24

Name: பெயர் ......... G. MANIKANDAN.
Rank: நிலை ......... DSP No. ......... VAC. TRICHY.

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.14/2024–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளராகிய நான், இன்று 26.10.2024 பணியில் இருந்த போது முற்பகல் 12.30 மணியளவில் திருமதி.வை.வனிதா, வயது.39, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருச்சி கிழக்கு தாலுக்கா, திருச்சி என்பவர் நிலையம் ஆஜராகி 25.10.2024ம் தேதி திருச்சி மாவட்டம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, மாவட்ட அலுவலர் அலுவலகத்தில் திடீர் சோதனை செய்தபோது தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகளின்படி (மகஜர்) நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அவர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் மற்றும் திடீர் சோதனை செயல்முறைகளின் (மகஜர்) விபரங்கள் பின்வருமாறு திருச்சி 26.10.2024 அனுப்புநர் திருமதி.வை.வனிதா, வயது.39 தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருச்சி கிழக்கு தாலுகா, திருச்சி. பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி. ஐயா, திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி இரகசிய தகவலின் அடிப்படையில், 25.10.2024ம் தேதி, மதியம் சுமார் 1 மணியளவில், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் நியமிக்கப்பட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியராகிய என் தலைமையில், திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.கோ.மணிகண்டன் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் திருச்சி மாவட்டம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, மாவட்ட அலுவலர் அலுவலகத்தினை திடீர் சோதனை மேற்கொண்டோம். மேற்படி சோதனையின்போது மேற்படி வாசல் அருகில் நின்று கொண்டிருந்த திரு.ஆ.நாகப்பன் வயது 63/2024, த/பெ ஆறுமுகம், எண்.203, மெட்ரோ அவென்யூ, ஸ்ரீரங்கம் என்பவரை விசாரணை செய்ததில் தடையில்லா சான்று தொடர்பாக தான் மாவட்ட Fire Service அலுவலரை பார்க்க வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்த போது அவரது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் ரூ.10,000/– இருந்தது. அது பற்றி கேட்க, அவர் சரியான முகாந்திரம் கூறாததால், அப்பணம் தடையில்லா சான்று பெறுவதற்கு கையூட்டாக கொடுக்கவுள்ள பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அப்பணம் காவல் துணைக் கண்காணிப்பாளரால் கைப்பற்றப்பட்டது. மேலும், சோதனையில் மேற்படி அலுவலகத்திற்கு வெளியே மாவட்ட அலுவலர் பயன்படுத்தும் அரசு வாகனம்

TN 24 G 0722 Bolero நின்று கொண்டிருந்தது. அந்த வாகனத்தின் அருகில் நின்று கொண்டிருந்த நபரை விசாரிக்க தனது பெயர் மணிகண்டன் என்றும், தான் தீயணைப்பாளர் எனவும். (தீயணைப்பாளர் எண்.11646) தான் மேற்கண்ட வாகனத்தின் தற்காலிக ஓட்டுனராக மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை அலுவலர் அவர்களிடம் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். எனவே, அந்த வாகனத்தினையும் மற்றும் ஓட்டுனரையும் சோதனை செய்த போது, வாகன ஓட்டுனரிடம் பணம் எதுவும் இல்லை. மேற்படி அரசு வாகனத்தின் நடு இருக்கை பகுதியில் இருந்த NEXT என்று எழுதப்பட்ட ஆரஞ்சு நிற சாக்கு பையை எடுத்து சோதனை செய்ததில் அதில் சலவை துணிகளுக்கு கீழே 500 ரூபாய் நோட்டுகள் இரண்டு கத்தைகளாக இருந்தது. அப்பணத்தினை எடுத்து எண்ணிப்பார்க்க ஒரு கத்தையில் ரூ.40,000/-மும், மற்றொரு கத்தையில் ரூ.47,000/-மும் ஆக கூடுதல் ரூ.87,000/- இருந்தது. மேற்கண்ட நடு இருக்கையில் இருந்த பணம் பற்றி வாகன ஓட்டுனர் திரு.மணிகண்டனிடம் கேட்க அதில் உள்ள துணிகள் மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை அவர்களுடையது என்றும், அதில் உள்ள பணம் பற்றி தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார். அப்பணம் குறித்து திரு.இரா.ஜெகதீஸ், மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, திருச்சி என்பவரிடம் கேட்க அவர் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்ததால், மேற்படி பணம் தற்காலிக பட்டாசு கடை உரிமையாளர்களுக்கு தடையில்லா சான்று வழங்குவதற்காக / வழங்கியதற்காக உரிமையாளர்களிடம் கையூட்டாக கேட்டு வாங்கி வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் ரூ.87,000/- பணம் காவல் துணைக் கண்காணிப்பாளரால் கைப்பற்றப்பட்டது. இது குறித்து திடீர் சோதனை செயல்முறைகள் மதியம் 1.15 மணி முதல் மாலை 5.30 மணிவரையில் தயார் செய்யப்பட்டது. மேற்படி திடீர் சோதனை செயல்முறையின் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் 26.10.2024ம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் இணைக்கப்பட்டுள்ளது. இப்படிக்கு (Sd) (xxxx) வை.வனிதா, 26.10.2024. திடீர் சோதனை செயல்முறை:- இன்று 25.10.2024 பிற்பகல் சுமார் 13.15 மணிக்கு திருச்சி மாநகரம், மாவட்ட நீதி மன்றம் - பீமநகர் செல்லும் சாலையில் ஆற்று பாதுகாப்பு கோட்ட அலுவலகத்திற்கு அடுத்து அமைந்துள்ள நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அரசு கட்டிடத்தில் மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் என்ற அலுவலகத்தை மாவட்ட ஆய்வு குழு அலுவலரால் நியமிக்கப்பட்ட திருமதி.வை.வனிதா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருச்சி கிழக்கு தாலுகா, திருச்சி மாவட்டம், என்பவர் தலைமையில் திரு.கோ.மணிகண்டன், காவல் துணை

கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி மற்றும் விஜிலன்ஸ் குழுவினர் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் பொருத்து மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் திடீர் சோதனை செயல்முறைகள். திருச்சி மாநகரம், நீதிமன்ற வளாகத்திற்குள் செயல்பட்டு வரும் மாவட்ட அலுவலகம், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் என்ற அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்களால் எதிர் வரும் தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு தற்காலிக பட்டாசு கடை உரிமையாளர்கள், பட்டாசு கடை வைப்பதற்கு தடையில்லா சான்று பெறுவதற்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பித்து, அவர்களுக்கு இணையதளம் மூலம் தடையில்லா சான்று வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி தடையில்லா சான்று விரைவாக கிடைப்பதற்கு. பட்டாசு கடை உரிமையாளர்களிடம் மாவட்ட அலுவலகம், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் என்ற அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள், தங்கள் அரசுப்பணியினை செய்து தருவதற்காக கையூட்டு கேட்டுப்பெறுவதாக, திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இன்று 25.10.2024 பிற்பகல் சுமார் 13.00 மணிக்கு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் நியமிக்கப்பட்ட திருமதி.வை.வனிதா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருச்சி கிழக்கு தாலுகா, திருச்சி அவர்கள் முன்னிலையில் மேற்படி விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகமானது தெற்கு நோக்கி அமைந்துள்ளது. மேற்படி அலுவலக வளாகத்திற்கு தெற்கு பக்கம் பிரதான நுழைவாயில் அமைந்துள்ளது. கட்டிடத்தின் உள்ளே நுழைந்ததும் ஒரு வராண்டாவும், வராண்டாவின் இடதுபுறத்தில் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணி அலுவலர் அறையும், அதனை அடுத்து கண்காணிப்பாளர் அறையும், அதனை அடுத்து பிரிவு அலுவலர்கள் அறையும், அதன் உள்ளே உதவியாளர்கள் அறையும் அதனை அடுத்து உதவி மாவட்ட அலுவலர் அறையும் அதனை அடுத்து பூட்டிய நிலையில் பொருட்கள் வைப்பறையும் அமைந்துள்ளது. மேற்படி கட்டிடத்தின் உள்ளே முதலில் மேற்குபுறம் இருந்த மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணி அலுவலர் அறையில் திரு.இரா.ஜெகதீஷ், என்பவர் அமர்ந்திருந்தார். அதனை அடுத்துள்ள கண்காணிப்பாளர் அறையில் கண்காணிப்பாளர் இருக்கையில் யாரும் இல்லை, அந்த அறையிலேயே வடமூலையில் கண்ணாடி கதவுகள் கொண்ட கணினி அறையில் திரு.நிர்மல் குமார் தட்டச்சர் அமர்ந்திருந்தார். அதனை அடுத்து இருந்த தட்டச்சர் அறையில் திரு.மணிவண்ணன், பதிவு கட்டறை எழுத்தர் அமர்ந்திருந்தார். மேற்படி அறையில் இ2 பிரிவு இளநிலை உதவியாளர் திரு.குருச்சந்திரன் என்பவர் அமர்ந்திருந்தார், அவருக்கு அருகில் திரு.கார்த்திக் தீயணைப்பாளர் எண்.9295 என்பவர் அமர்ந்திருந்தார், அவருக்கு அருகில் திரு.ராஜ்குமார்,

தீயணைப்பாளர் எண்.9823 என்பவர் அமர்ந்திருந்தார். மேற்படி அறைக்கு அடுத்து இருந்த உதவியாளர் அறையில் திரு.முருகானந்தம், அ-பிரிவு உதவியாளர் அமர்ந்திருந்தார், அவருக்கு அருகில் திரு.வீரசரவணன் தீயணைப்பாளர் எண்.7714 என்பவர் அமர்ந்திருந்தார், அதனை அடுத்து மேற்படி அறையில் திரு.வின்சென்ட்ராஜ், இ1 பிரிவு இளநிலை உதவியாளர் அமர்ந்திருந்தார், அவருக்கு அருகே அமர்ந்திருந்த திருமதி.சிவகாமி, ஆ1 பிரிவு உதவியாளர் அமர்ந்திருந்தார். அதனை அடுத்து இருந்த உதவி மாவட்ட அறையில் யாரும் இல்லை. அங்கிருந்த அனைவருக்கும் திடீர் சோதனை செய்ய வந்துள்ள நோக்கத்தை ஆய்வுக்குழு அலுவலரால் நியமிக்கப்பட்ட திருமதி.வனிதா, தலைமையிட்த்து துணை வட்டாட்சியர் கிழக்கு தாலுகா, திருச்சி மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் தெரிவித்துவிட்டு, அலுவலகத்தை சுற்றி காவலர்களை நிறுத்திவிட்டு, மேற்படி அலுவலகத்தில் உள்ள பணியாளர்களிடம் அவரவர்கள் அமர்ந்திருந்த இடத்திலேயே அமர செய்யப்பட்டது. மேற்படி வாசல் அருகில் நின்று கொண்டிருந்த சில நபர்களை விசாரணை செய்ததில் 1) ஆ.நாகப்பன் வயது 63/2024, த/பெ ஆறுமுகம், எண்.203, மெட்ரோ அவென்யூ, ஸ்ரீரங்கம் என்பவர் தடையில்லா சான்று தொடர்பாக பார்க்க வந்ததாக தெரிவித்தார் அவரை சோதனை செய்த போது அவரது இடது பக்க பேன்ட் பாக்கெட்டில் ரூ.10,000/- இருந்தது பற்றி கேட்க, அவர் சரியான முகாந்திரம் கூறாததால், அப்பணம் தடையில்லா சான்று பெறுவதற்கு கையூட்டாக கொடுக்கவுள்ள பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அப்பணத்தை மாவட்ட ஆய்வு குழு அலுவலர் அவர்களால் நியமிக்கப்பட்ட அலுவலர் திருமதி.வனிதா மூலம் எண்ணிப்பார்க்கப்பட்டு மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது, மேலும், அவரை சோதனை செய்த போது அவர் அணிந்திருந்த சட்டையின் மேல் இடதுபுற பாக்கெட்டில் ரூ.180/- இருந்தது அப்பணம் பற்றி கேட்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அப்பணத்தை மீண்டும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது, 2) திரு.க.நீலமேகம், வயது 35/2024, த/பெ கலியபெருமாள், எண்.30, காசிசெட்டி தெரு, உறையூர், திருச்சி, என்பவர் தடையில்லா சான்று தொடர்பாக பார்க்க வந்ததாக தெரிவித்தார் அவரை சோதனை செய்த போது ரூ.260/- இருந்தது பற்றி கேட்க அதுதனது சொந்த பணம் என்று கூறியதால் அப்பணத்தை மாவட்ட ஆய்வு குழு அலுவலர் அவர்களால் நியமிக்கப்பட்ட அலுவலர் திருமதி.வனிதா முன்னிலையில் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. 3) திரு.ராம்குமார், வயது 41/2024, த/பெ சண்முகம், எண்.8/61, கோவிந்த கோனார் தெரு, சங்கிலியாண்டபுரம் திருச்சி என்பவர் தடையில்லா சான்று தொடர்பாக பார்க்க வந்ததாக தெரிவித்தார் அவரை சோதனை செய்த போது ரூ.120/- இருந்தது பற்றி கேட்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் அப்பணத்தை மாவட்ட ஆய்வு குழு அலுவலர் அவர்களால் நியமிக்கப்பட்ட அலுவலர் திருமதி.வனிதா முன்னிலையில்

அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேற்படி கட்டிடத்தின் உள்ளே முதலில் மேற்குபுறம் இருந்த மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணி அலுவலர் அறையில் இருந்த திரு.ஜெகதீசன் என்பவரை மாவட்ட ஆய்வுகுழு அலுவலரால் நியமிக்கப்பட்ட அலுவலர் முன்னிலையில் சோதனை செய்ய அவரிடம் ரூ.1,200/- இருந்தது அது பற்றி கேட்க அது தனது சொந்த பணம் என்றதால் மீண்டும் அவரிடமே ஒப்புவிக்கப்பட்டது. அதனை அடுத்துள்ள கண்காணிப்பாளர் அறையில் வடமூலையில் கண்ணாடி கதவுகள் கொண்ட கணினி அறையில் இருந்த தட்டச்சர் திரு.நிர்மல் குமார் என்பவரை சோதனை செய்ய ரூ.4,550/- இருந்தது அப்பணம் பற்றி கேட்க அது தனது சொந்த பணம் என்ற கூறியதால் மீண்டும் அவரிடமே ஒப்புவிக்கப்பட்டது. அதனை அடுத்து இருந்த தட்டச்சர் அறையில் வடக்கில் அமர்ந்திருந்த பதிவு கட்டறை எழுத்தர் திரு.மணிவண்ணன் என்பவரை சோதனை செய்ய ரூ.20/- இருந்தது அப்பணம் பற்றி கேட்க அது தனது சொந்த பணம் என்ற கூறியதால் மீண்டும் அவரிடமே ஒப்புவிக்கப்பட்டது. இ2 பிரிவு இளநிலை உதவியாளர் திரு.குருச்சந்திரன் என்பவரை சோதனை செய்ய ரூ.4,400/- இருந்தது அப்பணம் பற்றி கேட்க அது தனது சொந்த பணம் என்ற கூறியதால் மீண்டும் அவரிடமே ஒப்புவிக்கப்பட்டது. அவருக்கு அருகில் தீயணைப்பாளர் எண்.9295 திரு.கார்த்திக் மற்றும் திரு.ராஜ்குமார், தீயணைப்பாளர் எண்.9823 ஆகியோர்களை சோதனை செய்ய அவரிடம் பணம் எதுவும் இல்லை. அதனை அடுத்து இருந்த உதவியாளர் அறையில் அ பிரிவு உதவியாளர் திரு.முருகானந்தம் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.3630/- பற்றி கேட்க அது தனது சொந்த பணம் என்ற கூறியதால் மீண்டும் அவரிடமே ஒப்புவிக்கப்பட்டது. மேற்படி அறையில் அமர்ந்திருந்த தீயணைப்பாளர் எண்.7714 திரு.வீரசரவணன் என்பவரை சோதனை செய்ய ரூ.300/- இருந்தது அப்பணம் பற்றி கேட்க அது தனது சொந்த பணம் என்ற கூறியதால் மீண்டும் அவரிடமே ஒப்புவிக்கப்பட்டது. அதனை அடுத்து மேற்படி அறையில் அமர்ந்திருந்த இ1 பிரிவு இளநிலை உதவியாளர் திரு.வின்செண்ட்ராஜ் என்பவரை சோதனை செய்ய ரூ.60/- இருந்தது அப்பணம் பற்றி கேட்க அது தனது சொந்த பணம் என்ற கூறியதால் மீண்டும் அவரிடமே ஒப்புவிக்கப்பட்டது. அவருக்கு அருகே அமர்ந்திருந்த ஆ1 பிரிவு உதவியாளர் திருமதி.சிவகாமி, என்பவரை சோதனை செய்ய ரூ.160/- இருந்தது அப்பணம் பற்றி கேட்க அது தனது சொந்த புணம் என்ற கூறியதால் மீண்டும் அவரிடமே ஒப்புவிக்கப்பட்டது. அதனை அடுத்து இருந்த உதவி மாவட்ட அறையில் யாரும் இல்லை. மேற்படி அலுவலகத்திற்கு வெளியே அரசு வாகனம் TN 24 G 0722 Bolero நின்று கொண்டிருந்தது. அந்த வாகனத்தின் அருகில் நின்று கொண்டிருந்த நபரை விசாரிக்க தனது பெயர் மணிகண்டன் என்றும் தீயணைப்பாளர் எண்.11646 எனவும், தான் மேற்கண்ட

வாகனத்தின் தற்காலிக ஓட்டுனராக மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை அலுவலர் அவர்களிடம் இருப்பதாகவும் தெரிவித்தார். வாகனத்தினையும் மற்றும் ஓட்டுனரையும் மாவட்ட ஆய்வு குழு அலுவலரால் நியமிக்கப்பட்ட அலுவலர் மூலம் சோதனை செய்த போது, வாகன ஓட்டுனரிடம் பணம் எதுவும் இல்லை. மேற்படி அரசு வாகனத்தின் முன் இருக்கை பகுதியை சோதனை செய்ய அதில் ஒன்றும் இல்லை, பின்னர், வாகனத்தின் நடு இருக்கை பகுதியில் இருந்த NEXT என்று எழுதப்பட்ட ஆரஞ்சு நிற சாக்கு பையை எடுத்து சோதனை செய்ததில் அதில் சலவை செய்யப்பட்ட நிலையில் துணிகளும் அத்துணிகளுக்கு கீழே 500 ரூபாய் நோட்டுகள் இரண்டு கத்தைகளாக இருந்தது. அப்பணத்தினை மாவட்ட ஆய்வுகுழு அலுவலரால் நியமிக்கப்பட்ட அலுவலர் முன்னிலையில் எடுத்து எண்ணிப்பார்க்க ஒரு கத்தையில் ரூ.40,000/–மும், மற்றொரு கத்தையில் ரூ.47,000/–மும் ஆக கூடுதல் ரூ.87,000/– இருந்தது. வாகனத்தின் பின் இருக்கை பகுதியில் சோதனை செய்த போது அதில் ஒன்றும் இல்லை. மேற்கண்ட நடு இருக்கையில் இருந்த பணம் பற்றி வாகன ஓட்டுனர் திரு.மணிகண்டனிடம் கேட்க அதில் உள்ள துணிகள் மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை அவர்களுடையது என்றும், அதில் உள்ள பணம் பற்றி தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார். அது குறித்து மேற்படி திரு.இரா.ஜெகதீஷ், மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை என்பவரிடம் விசாரணை செய்ய அவர் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்ததால், மேற்படி பணம் தற்காலிக பட்டாசு கடை உரிமையாளர்களுக்கு தடையில்லா சான்று வழங்குவதற்கு உரிமையாளர்களிடம் கையூட்டாக கேட்டு வாங்கி வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேற்சொன்ன தொகையும் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட நிகழ்வுகள் அனைத்தும் தலைமை காவலர் 446 திரு.பாபு என்பவரின் கைபேசி மூலமாக நிழற்படம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறை மாலை 17.30 மணிக்கு முடிக்கப்பட்டது. Submitted to the Court of the Hon'ble Special Judge, Special Court for the Prevention of Corruption Act Cases, Trichy. Received this report along with Surprise Check Mahazar drawn on 25.10.2024 and registered a case in Trichy V&AC Cr.No.14/2024 u/s 7, 7(A) of Prevention of Corruption Act-1988 (as amended in 2018) on 26.10.2024 at 13.00 hrs (Sd) (xxxx), G.Manikandan, Deputy, Supdt. of Police, V&AC, Trichy. 26/10/2024

26/10/24
DSP. V&AC
Trichy.